**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG20 – நிலை II (Grade II)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Written Examination)
**ஜூலை – ஆகஸ்டு2023**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
***Answer all questions in a word / line.*** **(10x1 = 10)**

1. வடலூரில் இராமலிங்க அடிகள் அமைத்த சபையின் பெயர் யாது?
2. மாந்தருக்கு இருகண்களாய் விளங்குவது எது?
3. கண்ணதாசன் இறுதியாக எழுதிய காவியம் யாது?
4. கேடில் விழுச்செல்வம் எது?
5. நாலடியார் யாரால் இயற்றப்பட்டது?
6. ஏட்டில் எழுதாக் கதைகள் எவை?
7. செய்யுள் வடிவில் தமிழில் தோன்றிய நாடக நூல் எது?
8. உயிரெழுத்துகளில் எந்த எழுத்துகள் அளபெடுக்கும்?
9. பிரிக்க முடியாத சொல்லை எவ்வாறு அழைப்பர்?
10. உடம்படுமெய் என்பன எவை?

**பகுதி –ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. இரமலிங்க அடிகள் வடலூர் வள்ளலார் என அழைக்கப்பெற்ற காரணம் யாது?
2. உலகம் ஒன்று என்பதற்கு கண்ணதாசன் காட்டும் உவமை யாவை?
3. திருக்குறள் பெயர்க்காரணம் கூறுக.
4. உயிரளபெடையின் – வகைகள் யாவை?
5. பொம்மை தொடர் வண்டிகள் எங்கு பயன்படுகின்றன?
6. நவச்சுனை என்ற பெயர் வரக்காரணம் என்ன?
7. எல்லா பண்புப்பெயர் புணர்ச்சிகளுக்கு இடையில் ஏற்படும் பொதுவான மாற்றம் எது?
8. ஓர் அசை சீர்கள் எவை?
9. குறல் வெண்பாவின் அமைப்பு யாது?
10. பின்வருநிலையணி வரையறை தருக.
11. குகை கோவில் என்றால் என்ன?
12. உழவர் உழவு செய்யாமல் பறம்பு மலையில் விளைவன யாவை?

13. பகுபத உறுப்புகள் யாவை?

14. குற்றாலத்தில் வாழ்கின்ற மக்கள் எதனைத் தேடுகின்றனர்?

15. பாரதியார் பணியாற்றிய இதழ்கள் யாவை?

**பகுதி – இ**

**III. எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**

***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. சுயமரியாதை உலகு என்று பாரதிதாசன் தன் பாடல் வழியே கூறுவன யாவை?
2. திருநாவுக்கரசர் – ஆசிரியர் குறிப்பு தருக.
3. இயேசு பகைவரையும் நேசிக்கும் தன்மையை உலகிற்கு உணர்த்திய பாங்கினை அ.மு. பரமசிவானந்தம் பாடல் வழி விளக்குக.
4. பரம்பு மலையில் எவையெல்லாம் இசையாக கேட்பதாக கபிலர் பாரியிடம் கூறுகின்றார்?
5. ஒற்றளபெடை என்றால் என்ன? விளக்குக. இரண்டு எடுத்துக்காட்டு தருக.
6. குறுக்கம் வகைகள் யாவை? அவற்றை உதாரணத்துடன் விளக்குக.
7. பெயர்ச்சொல்லின் வகைகள் யாவை? அவற்றை உதாரணத்துடன் விளக்குக.
8. குற்றியலுகரப் புணர்ச்சி என்றால் என்ன? விளக்கி உதாரணம் தருக.

**பகுதி –ஈ**

**IV. ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u>விடை தருக.**

***Answer any one of the following questions in fifteen sentences.*** **(1x10=10)**

1. தொடர்வண்டி – என்ற பாடப்பகுதியைத் தொகுத்து எழுதுக.
2. அணியிலக்கணத்தை விளக்கி, ஏதேனும் மூன்று அணிகளை உதாரணத்துடன் விளக்குக.
3. புதுக்கவிதை என்றால் என்ன ? நீ விரும்பும் ஏதேனும் இரண்டு புதுக்கவிதைகளை எழுதி, அக்கவிதைகளின் ஆசிரியர் குறிப்பை எழுதுக.

**பகுதி –உ**

**V. ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக**

***Write an essay in three pages to any one of the questions.***

**(1x15=15)**

1. பகலவன் என்று போற்றப்படும் பெரியாரின் வாழ்க்கை, அவர் ஆற்றிய சமுதாய பணிகள் பற்றியும் ஒரு கட்டுரை வரைக.
2. வெண்பா, ஆசிரியப்பா வகைகளை விளக்கி உதாரணம் தருக.

*****